**டிசம்பர் – 15**

# TNPSC துளிகள்

- மத்தியத் தொழிலாளர் நலத் துறை அமைச்சரான சந்தோஷ் குமார் கங்வார் 2019 ஆம் ஆண்டின் சமூகப் பாதுகாப்பு நெறிமுறையை மக்களவையில் அறிமுகப் படுத்தியுள்ளார்.
    - இந்த மசோதாவானது பல்வேறு நலன்சார் நடவடிக்கைகள் குறித்த எட்டு வெவ்வேறு மசோதாக்களை ஒன்றிணைக்கின்றது. மேலும் இது அமைப்புசாரா துறையில் உள்ள 50 கோடி ஊழியர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்கவும் முற்படுகின்றது.
- புதுச்சேரி அரசு ஒரு புதிய ஸ்டார்ட் - அப் (புதிய தொழில் தொடங்குதல்) கொள்கையை வெளியிட்டுள்ளது.
    - இது ஸ்டார்ட் - அப் காப்பகங்களை (மையங்களை) அமைப்பதை ஆதரிப்பதற்கும் கூடுதலான பணியாற்றும் இடங்களை உருவாக்குவதற்கும் 10 கோடி மதிப்பிலான நிதியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 'உலகின் சக்திவாய்ந்த 100 பெண்மணிகள்' என்ற தலைப்பைக் கொண்ட 2019 ஆம் ஆண்டின் ஃபோர்ப்ஸ் பட்டியலின் 16வது பதிப்பில் ஜெர்மனியப் பிரதமரான ஏஞ்சலா மெர்கல் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
    - இந்தப் பட்டியலில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 34வது இடத்தில் உள்ளார். இந்தப் பட்டியலில் சுவீடனைச் சேர்ந்த பெண்மணியான கிரெட்டா துன்பெர்க் 100வது இடத்தில் உள்ளார்.

# தேசியச் செய்திகள்

## குடியுரிமை (திருத்தச்) சட்டம், 2019

- குடியுரிமைத் திருத்த மசோதா (Citizenship Amendment Bill - CAB), 2019 என்பதனை இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. இந்த மசோதாவானது
    - மக்களவையில் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 09 அன்றும்
    - மாநிலங்களவையில் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 11 அன்றும்

    நிறைவேற்றப் பட்டுள்ளது.
- இந்த மசோதாவிற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 12 அன்று தனது ஒப்புதலை வழங்கினார்.
- இந்தச் சட்டமானது பாகிஸ்தான், வங்க தேசம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் உள்ள 6 சமூகங்களை (இந்து, கிறித்தவர், சீக்கியர், சமணர், பௌத்தர், மற்றும் பார்சி) சேர்ந்த அகதிகளுக்கு குடியுரிமை வழங்க முயல்கின்றது.
- இது முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தியாவின் மூன்று அண்டை நாடுகளிலிருந்து வரும் முஸ்லிம் அல்லாதவர்களை இந்தியக் குடிமக்களாக மாற்றுவதை எளிதாக்குகின்றது.

*முக்கிய அம்சங்கள்*


- இந்த மசோதாவானது குடியுரிமைச் சட்டம் 1955ஐ திருத்துகின்றது.
- முதன்முறையாக, இந்தச் சட்டமானது 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அல்லது அதற்கு முன்னர் இந்தியாவிற்குள் நுழைந்த முஸ்லிம் அல்லாதவர்களுக்கு மதத்தின்

அடிப்படையில் குடியுரிமையை வழங்க இருக்கின்றது.

- இந்தத் திருத்தமானது, ஒருவர் குடியுரிமையைப் பெறுவதற்கு இந்தியாவில் வசிக்க வேண்டிய கால அளவான 11 ஆண்டுகள் என்ற ஒரு குறிப்பிட்ட நிபந்தனையை 5 ஆண்டுகளாகத் தளர்த்துகின்றது.
- விதிவிலக்குகள்: சட்டவிரோதமாக குடியேறுபவர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கான விதிகள் பின்வரும் இரண்டு வகைகளுக்குப் பொருந்தாது:
    - "உட்கோட்டு நுழைவு அனுமதி முறையினால்" (அருணாச்சலப் பிரதேசம், மிசோரம் நாகாலாந்து மற்றும் மணிப்பூர்) பாதுகாக்கப்பட்டு வரும் மாநிலங்கள்.
    - அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணையின் கீழ் உள்ள பகுதிகள் (அசாம், மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோரம்).

***பின்னணி***

- இந்தியாவில் குடியுரிமையானது 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தால் கட்டுப்படுத்தப் படுகின்றது.
- இந்தக் குடியுரிமைச் சட்டமானது இதுவரை 1986, 1992, 2003, 2005 மற்றும் 2016 போன்ற ஆண்டுகளில் திருத்தப் பட்டுள்ளன.
- இச்சட்டமானது பிறப்பின் மூலம், மரபு வழியின் மூலம், பதிவு செய்தல் மூலம், இயல்புரிமை மூலம் மற்றும் மற்ற பகுதிகளை இந்தியாவுடன் இணைப்பதன் மூலம் ஆகிய ஐந்து முறைகளின் வாயிலாக இந்தியாவில் குடியுரிமையைப் பெறலாம் என்று குறிப்பிடுகின்றது.
- இருப்பினும், சட்ட விரோதமாகக் குடியேறியவர்கள் இந்தியக் குடிமக்களாக மாற முடியாது.
- தற்பொழுது திருத்தப்பட்ட இந்தச் சட்டமானது சட்ட விரோதமாக குடியேறுபவர்களை வரையறுக்கின்றது.



CITIZENSHIP ACT & AMENDMENT

A LOOK AT WHAT THE BILL AIMS TO DO IN VIEW OF THE ACT, AND THE RESPONSE IT RECEIVED

**FOR SELECT FEW**

Citizenship Amendment Bill seeks to amend the Citizenship Act 1955 in order to make illegal migrants — Hindus, Sikhs, Buddhists, Jains, Parsis and Christians from Afghanistan, Bangladesh and Pakistan — eligible for citizenship after six years of stay in India instead of 12 even if they don't possess proper document.

**CHANGE IN ELIGIBILITY**

Under the Citizenship Act, the applicant must have resided in India during the last 12 months, and for 11 of the last 14 years to get citizenship. The Bill relaxes this 11-year requirement to five years for persons belonging to the 6 religions and 3 countries. It also makes those who entered India till 2014 eligible.

**CRITICISM RECEIVED SO FAR**

The Bill has come under severe criticism with critics saying that the Bill violates Clause 6 of the Assam Accord, which stipulates "constitutional, legislative and administrative safeguards" for the preserving the culture and identity of Assamese people. Critics have also said that the extensive exercise of updating the National Register of Citizens (NRC) will become null and void due to this exercise.

## இந்தியப் பெருங்கடல் உரையாடல் என்ற முன்னெடுப்பு – தில்லி

- மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகமானது இந்தியப் பெருங்கடல் உரையாடலின் (Indian Ocean Dialogue - IOD) 6வது கூட்டம் மற்றும் தில்லி உரையாடல் என்ற முன்னெடுப்பின் 11வது கூட்டம் ஆகியவற்றை புது தில்லியில் உள்ள பிரவாசி பாரதிய மையத்தில் நடத்தியது.
- இந்த இரண்டு உரையாடல்களும் தொடர்ச்சியாகவும் ஒரே மாதிரியான இந்திய - பசிபிக் கருப்பொருள்களிலும் நடத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.

- 2019 ஆம் ஆண்டின் இந்தியப் பெருங்கடல் உரையாடல் கூட்டத்தின் கருப்பொருள் 'இந்திய - பசிபிக்: விரிவாக்கப்பட்ட ஒரு புவியியல் பரப்பு மூலம் இந்தியப் பெருங்கடல் பகுதியை மீண்டும் கற்பனை செய்தல்" என்பதாகும்.
    - IOD ஆனது உலக விவகாரங்களுக்கான இந்தியப் பெருமன்றத்தால் (Indian Council for World Affairs - ICWA) ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டின் தில்லி உரையாடலுக்கான கருத்துரு, 'இந்திய - பசிபிக் கூட்டுறவை மேம்படுத்துதல்' என்பதாகும்.
    - இது புது தில்லியைத் தலைமையாகக் கொண்ட தன்னாட்சிக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனமான வளரும் நாடுகளுக்கான ஆராய்ச்சி மற்றும் தகவல் அமைப்பினால் (Research and Information System - RIS) ஏற்பாடு செய்யப்பட்டது.

## உள்கட்டமைப்பு முதலீட்டு அமைப்பு

- மத்திய அமைச்சரவையானது உள்கட்டமைப்பு முதலீட்டு அமைப்பை (Infrastructure Investment Trust - InvIT) அமைக்கவும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு நிதியளிக்கவும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு (National Highways Authority of India - NHAI) ஒப்புதல் அளித்துள்ளது.
- பாரத்மாலா என்ற திட்டத்தைக் கருத்தில் கொள்கையில், குறிப்பிட்ட கால அளவிற்குள் இந்தத் திட்டங்களை முடிப்பதற்கு NHAIக்கு கொஞ்சம் அதிகமான நிதி தேவைப்படும்.
- பாரத்மாலா திட்டம் என்பது அரசின் ஒரு முதன்மையான நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டமாகும்.

*உள்கட்டமைப்பு முதலீட்டு அமைப்பு பற்றி:*


- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் வழங்கப்பட்ட InvIT வழி காட்டுதல்களின் படி, NHAI ஆனது உள்கட்டமைப்பு முதலீட்டு அமைப்புகளை அமைக்க இருக்கின்றது.
- InvITன் கீழ், ஒரு சிறப்பு நோக்கம் கொண்ட அமைப்பை (special purpose vehicle - SPV) உருவாக்குவதற்காக இந்த நெடுஞ்சாலைத் திட்டங்கள் தொகுக்கப்பட இருக்கின்றன. அதன்பின் இந்தத் திட்டங்கள் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

## உட்கோட்டு நுழைவு அனுமதி முறை – நாகாலாந்தின் திமாபூர் மாவட்டம் மற்றும் மணிப்பூருக்கு நீட்டிப்பு

- நாகாலாந்து அரசானது திமாபூர் மாவட்டத்திற்கு உட்கோட்டு நுழைவு அனுமதி (Inner Line Permit - ILP) முறையை நீட்டித்துள்ளது.
- குடியுரிமைத் திருத்த மசோதாவின் (Citizenship Amendment Bill - CAB) வரம்பிலிருந்து இந்த முழு மாவட்டத்திற்கும் விலக்கு அளிக்கும் வகையில் இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இதுவரை, நாகாலாந்தில் ILP முறையின் கீழ் இல்லாத ஒரே மாவட்டம் திமாபூர் ஆகும்.
- ஏனெனில் இந்த மாவட்டமானது வணிக மையமாகவும் பரந்து பட்ட மக்கள் தொகையைக் கொண்டதாகவும் உள்ளது (பெரும்பாலும் 'சிறிய இந்தியா' என்று குறிப்பிடப் படுகின்றது).
- இந்த உட்கோட்டு நுழைவு அனுமதி முறையில் மணிப்பூரின் சேர்க்கையும் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 10ம் தேதியன்று அறிவிக்கப் பட்டது.
- தற்சமயம் உட்கோட்டு நுழைவு அனுமதி முறை அருணாச்சலப் பிரதேசம், மிசோரம்,

நாகாலாந்து மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கி இருக்கின்றது.

- மேலும், அசாம் மற்றும் திரிபுராவில் உள்ள பழங்குடியினர் அல்லாத பகுதிகள் மற்றும் சிக்கிம் ஆகியவற்றைத் தவிர இந்தியாவில் வடகிழக்கில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் CABயிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.




**ARUNACHAL PRADESH:** Entire state under ILP regime

**NAGALAND:** Entire state under ILP regime

**TRIPURA:** Sixth Schedule covers 70% of geographical area

**MEGHALAYA:** Almost entire sstate covered under Sixth Schedule, except a part of Shilong

**ASSAM:** 3 Autonomous District Councils under Sixth Schedule

**MANIPUR:** Entire state under ILP regime

# சர்வதேசச் செய்திகள்

## ஐக்கிய இராஜ்ஜியத்தில் நடைபெற்ற தேர்தல் - 2019

- இங்கிலாந்துப் பிரதமரான போரிஸ் ஜான்சனின் கன்சர்வேடிவ் கட்சியானது அந்நாட்டுப் பாராளுமன்றத்தின் (650 இல் 365) பொது அவையில் (கீழ் அவை) பெரும்பான்மையான இடங்களை வென்றுள்ளது.
- ஜெர்மி கோர்பினின் தலைமையிலான தொழிலாளர் கட்சியானது 1935 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தற்பொழுது பெரும் இழப்பைச் சந்தித்துள்ளது (650 இல் 202).
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 15 அரசியல்வாதிகள் இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, பொது அவையில் (ஐக்கிய இராஜ்ஜியத்தின் கீழ் அவை) இடம் பிடித்துள்ளனர்.
- இது 2015 ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்தில் நடைபெற்ற மூன்றாவதுப் பொதுத் தேர்தல் இதுவாகும். கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக டிசம்பர் மாதத்தில் தேர்தல் இங்கு நடைபெற்றுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## B2C மின்னணு வணிகக் குறியீடு 2019

- “வணிகத்திலிருந்து நுகர்வோர் வரை” (business-to-consumer - B2C) என்ற 2019 ஆம் ஆண்டின் B2C மின்னணு வணிகக் குறியீட்டில் மொத்தமுள்ள 152 நாடுகளில் இந்தியா 73வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீடானது வர்த்தக மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இது ஆன்லைனில் பொருள்கள் வாங்கப் படுவதை ஆதரிப்பதற்காக பொருளாதாரத்தின் தயார் நிலையை அளவிடுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் B2C மின்னணு வணிகக் குறியீட்டில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக நெதர்லாந்து முதலிடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் சுவிட்சர்லாந்து 2வது இடத்திலும் அதற்கு அடுத்து சிங்கப்பூர், பின்லாந்து, ஐக்கிய இராஜ்ஜியம், டென்மார்க், நார்வே, அயர்லாந்து, ஜெர்மனி மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் உள்ளன.
- ஐரோப்பிய நாடுகள் இந்தப் பட்டியலில் முதல் 10 இடங்களில் 8 இடங்களைப் பிடித்துள்ளன.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கல்வி - யுனெஸ்கோவுடன் டெல் தொழில்நுட்ப நிறுவனம்

- வகுப்பறைகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக டெல் தொழில்நுட்ப நிறுவனம் யுனெஸ்கோ அமைப்பின் (ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு) MGIEP உடன் (அமைதிக்கான மகாத்மா காந்தி கல்வி நிறுவனம் - Mahatma Gandhi Institute of Education for Peace) இணைந்துள்ளன.
- இது தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் நீடித்த வளர்சிக்கான இலக்கு 4ன் (SGD 4-Education) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படி, புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதற்கு ஆசிரியர்களுக்கு உதவுவதன் மூலமும் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- இது தொடர்பான அறிவிப்பானது ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற மனிதநேயத்திற்கான மாறிவரும் கல்வி முறை என்ற மாநாட்டின் (TECH 2019) போது வெளியிடப் பட்டது.

UNESCO
United Nations Educational, Scientific and Cultural Organization
MGIEP
Mahatma Gandhi Institute of Education for Peace and Sustainable Development
DELL

# மாநிலச் செய்திகள்

## மூங்கில் சாகுபடி குறித்த பயிலரங்கம் – ஜம்மு

- ❖ மூங்கில் சாகுபடி குறித்த இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது வகையான பயிலரங்கமானது ஜம்முவில் நடத்தப்பட இருக்கின்றது.
- ❖ "மூங்கில் - ஒரு அதிசயப் புல் வகை – ஜம்மு காஷ்மீரில் நிலையான வளர்ச்சிக்கான வாய்ப்பு" என்ற தலைப்பில் ஒரு பயிலரங்கமும் கண்காட்சியும் நடைபெற இருக்கின்றன.
- ❖ ஜம்முவின் கண்டி பகுதிகளில் மூங்கில் சாகுபடியை மேம்படுத்துவது குறித்து இந்தப் பயிலரங்கம் கவனம் செலுத்த இருக்கின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## FICCI - 2019 ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர்

- ❖ FICCI (இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு) இந்திய விளையாட்டு விருதுகளின் '2019 ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர்' என்ற விருதானது புது தில்லியில் உள்ள FICCI கூட்டமைப்பு வளாகத்தில் பின்வரும் நபர்களுக்கு வழங்கி கௌரவிக்கப் பட்டது.
    - ○ இந்திய மகளிர் ஹாக்கி அணித் தலைவரான ராணி ராம்பால் (25),
    - ○ ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற துப்பாக்கி சுடும் வீரரான சவுரப் சவுத்ரி (17).



## விண்வெளி ஆஸ்கார் விருது

- குருகிராமில் உள்ள ப்ளூ ஸ்கை அனலிட்டிக்ஸ் என்ற ஒரு ஸ்டார்ட் - அப் நிறுவனமானது ‘ஜூரி’ என்ற ஒரு செயலியை உருவாக்கியுள்ளது. இந்தச் செயலி கோப்பர்நிக்கஸ் மாஸ்டர்ஸ் விருதை வென்றுள்ளது. இந்த விருது விண்வெளி ஆஸ்கார் விருது என்றும் அழைக்கப் படுகின்றது.
- இந்த விருதானது சமூகத் தொழில்முனைவோர் பிரிவின் கீழ் வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதானது ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்துடன் (European Space Agency - ESA) இணைந்து ஐரோப்பிய ஆணையத்தினால் (European Commission - EU) நிர்வகிக்கப்படும் புவிக் கண்காணிப்பு திட்டத்தால் வழங்கப் பட்டுள்ளது.




## சுனில் சேத்ரி - பூமாவின் நிறுவனத் தூதர்

- இந்திய ஆண்கள் கால்பந்து அணியின் தலைவரான சுனில் சேத்ரி பூமாவுடன் 3 ஆண்டு கால ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளார்.
- பெங்களூரு கால்பந்து அணித் தலைவரான இவர் போர்ச்சுக்கல் நாட்டின் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்குப் பிறகு தற்போது சர்வதேசக் கால்பந்துப் போட்டிகளில் அதிக கோல் அடித்த வீரர்களில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.
- இவர் ஆறு முறை ஆண்டின் அனைத்து இந்திய கால்பந்துக் கூட்டமைப்பின் (All India Football Federation - AIFF) சிறந்த வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவருக்கு 2011 ஆம் ஆண்டில் அர்ஜுனா விருதும் 2019 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதும் வழங்கப் பட்டுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★